


கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று முன்தினம் (16.10.2023) இராணிப்பேட்டை நகராட்சி, இராஜேஸ்வரி திரையரங்கம் அருகில் தேவி மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் சார்பாக நடைபெற்ற சமுதாய வளை காப்பு விழாவில் உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, நகரமன்றத் தலைவர்கள் திருமதி.சுஜாதா வினோத், திருமதி.ஹரிணி தில்லை, முஹமது ஹமீன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் சே.வெங்கட்ரமணன், திருமதி.புவனேஸ்வரி சத்தியநாதன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.வசந்தி ஆனந்தன், நகரமன்றத் துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா மற்றும் பலர் உள்ளனர்.




திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி அளவில் நடைபெற்ற பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகளை, கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் வழங்கினார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி எம்.எல்.ஏ., பொன்.முத்து, எஸ். பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், சி.ராம்காந்த், பொன்.தனுசு, ஜெ.மெய்கண்டன், அ.மோகன்ராஜ், ச.பிரகாஷ், மு.தினேஷ்பாபு, த.ரகுபதி, தா.சண்முகம், டி.என்.பி.வினோத்குமார், து.மணியரசு உட்பட பலர் உள்ளனர்.

# நமது முதல்வர் மனிதநேயம் உள்ள முதல்வராக திகழ்கிறார்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்

*சிவகங்கை, அக்.18-*

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி தருமை கயிலை மேல்நிலைப் பள்ளி,பிரான் மலை பாரி வள்ளல் மேல்நிலைப் பள்ளிகளில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல்வரின் விலை இல்லா மிதிவண்டிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது:-

தமிழகத்தில் மக்கள் ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். குன்றக்குடியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் படிப்பதற்கான ஒரு புதிய வகுப்பறைதேவை என்ற கோரிக்கையினை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதை உடனடியாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிறைவேற்றி தந்தார்.பிரான் மலையில் கூடுதல் வகுப்பறை கட்டிடம், நாடக மேடை போன்றவற்றினை நிறைவேற்றி னார். தொகுதிக்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். மக்கள் நல பணிகளில் அக்கறையுடன் செயல் பட்டு வருகிறார். மக்களை சென்று சந்திக்க வேண்டும் என்று விரும்பி அவருக்குள்ள பணியின் சுமையினை பொருட்படுத்தாமல் நேரம் ஒதுக்கி தொகுதியில் வலம் வந்து கொண்டிருக்கிறார்.



சிறிய,பெரியநிகழ்ச்சிஎன்று பாராமல் மக்களை இதன் வாயிலாக நேரில் சந்திக்க விரும்பி இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது பாராட்டுக்குரியதாகும்.

முதல்வர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் அறநிலையத் துறை அமைச்சராக சிறப்பாக பணியாற்றினார். தந்தை பெரியார், முதல்வர் கலைஞரின்மனதில் முள்ளாக இருந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உன்னத திட்டத்தை நிறைவேற்றினார். அவர்கள் முறையாக பயிற்சி பெறும் வகையில் பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்தினார். பாழடைந்திருந்த கோவில்களை சீரமைத்து குடமுழுக்கு நடத்தினார்.

தற்போது தொகுதி முழுவதும் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். ராமேஸ்வரத்தில் ஏழை படகோட்டியின் மகனாக பிறந்த அப்துல் கலாம் பெரிய விஞ்ஞானியாக திகழ்ந்தார். நாட்டின் ஏவுகணையை தயாரித்தார். முதல் குடிமகன் என்று அழைக்கப்படும் நாட்டின் குடியரசு தலைவராக சிறப்பாக திறமையுடன் பணியாற்றினார்.

அவரது பணியினை உலகமே பாராட்டியது. அவருடைய சிலையை அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் தமிழக முதல்வர் திறந்து வைத்து சிறப்பு செய்துள்ளார்.

அவர் தனது வாழ்நாளில் பல்வேறு சாதனைகள் செய்திருந்தாலும் கால்ஊனம் அடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை காலை மிகவும் எளிமையான முறையில் செய்திட வேண்டும் என்று திட்டமிட்டு அதை செய்துமுடித்தார். உலக அளவில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி இருந்தாலும் ஊனமுற்றவர்களுக்கு செயற்கைகோள் தயாரித்ததை வாழ்நாள் சாதனையாக கருதிய தாக கூறினார் அவரை அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகவும் பாராட்டினார். தற்பொழுது சந்திரயான். 3 திட்டத்தினை உருவாக்கிய விஞ்ஞானி தமிழக விஞ்ஞானி ஆவார். தமிழகத்தில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்கள் விஞ்ஞானிகளாக உயர் பதவிக்கு வர வேண்டும். அதைத்தான் தமிழக முதல்வர்அவர்கள் கல்விக்காக பல்வேறு பணிகளை செயல்படுத்தி வருகிறார்.அவர் விருப்பத்தினை நீங்கள் நிறைவேற்றும் வகையில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். முதல்வர் தலைமையில் மனிதநேய மிக்க ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார்.

# ஆவடியில் பாகமுகவர்கள் கூட்டம்!

*திருவள்ளூர், அக். 18 -*

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி வடக்கு மேற்கு தெற்கு பகுதி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திருவேற்காடு நகரம் ஆகிய பகுதியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச்செயலாளரு மான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் BLA2/BLA ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இதில் ஆவடி வடக்கு பகுதிக்குட்பட்ட பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத் ஏற்பாட்டில் 14, 20 21, 22, 24, 37,45, ஆவடி மேற்கு பகுதி உட்பட்ட பகுதி செயலாளர் பொன்.விஜயன் ஏற்பாட்டில் 1,2,3,4,5,11,12, திருவேற்காடு நகரத்திற்கு உட்பட்ட நகரச் செயலாளர் என். இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில் 5, 6, 7, 8 ஆவடி தெற்கு பகுதிகுட்பட்ட ஜி.ராஜேந்திரன் ஏற்பாட்டில் 31, 33, 34,35, 40, 41, 42, ஆகிய வார்டுகளில் நடைபெற்றது.

ஆய்வு கூட்டத்தில் ஆவடி தொகுதி பார்வையாளர் ஆர். டி.இ.ஆதிசேசன், மாநகர செயலாளர் சன் பிரகாஷ் , மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள்.அதே போல் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் உள்ள வரதராஜபுரம், நசரத் பேட்டை, அகரமேல், செம்பரம்பாக்கம், மேப்பூர், சென்னீர்குப்பம், பாரிவாக்கம், கண்ணப்பாளையம், சோராஞ்சேரி, வயலாநல்லூர், பானவேடு தோட்டம், கோள ப்பஞ்சேரி, காவ ல்சேரி, காட்டுப்பாக்கம் ஆகிய ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.



திருப்புவனம் ஒன்றியம் பழையனூர். அல்லிநகரம். திருப்பாசேத்தி. கீழடி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளியில் 11.12. பயிலும் மாணவ.மாணவிகளுக்கு விலை யில்லா மிதிவண்டிகளை திருப்புவனம் யூனியன் தலைவர் சின்னையா தலைமையில். மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில். திருப்பவுனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன். வட்டாட்சியர் கண்ணன். ஒன்றிய செயலாளர்கள் வசந்திசேங்கைமாறன். கடம்பசாமி. யூனியன் துணை தலைவர் மூர்த்தி. ஒன்றிய கவுன்சிலர்கள் சுப்பையா.ஈஸ்வரன். இந்திரா. வைத்தீஸ்வரி. ஊராட்சி மன்ற தலைவர்கள். சுப்பிரமணியன். வெங்கடசுப்பிரமணியன். இந்திராகாந்தி. மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் சேகர். மாவட்ட மீனவர் அணி துணைச் செயலாளர் அண்ணா மலை. ஒன்றிய இளைஞரனி அமைப்பாளர்கள் அறிவுக்கரசு. தேவதாஸ். மாவட்ட தொழிலாளரணி துணைச் செயலாளர் சங்கர். இலக்கிய அணி.கோபால். ஒன்றிய தலைவர் இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# கன்னியாகுமரியில் மழை : வானிலை மையம் தகவல்!

*குமரி, அக்.18-*

தமிழகத்தில் நேற்று முன்தினம் இரவு கன்னியாகுமரி, கோவை,புதுக்கோட்டை யில் நல்ல மழை பெய்தது. இந்த நிலையில் தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட 3 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாகவே பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதன்படி, கோவை, நீலகிரி, கன்னியாகுமரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

இதே போல் நேற்று முன்தினம் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. மாலை மற்றும் இரவு நேரங்களில் மிதமான மழை பெய்தது.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை பகுதியில் பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்ட நிலையில், மாலையில் சுமார் ஒரு மணி நேரம் மழை நல்ல மழை பெய்தது. இதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் சாரல் மழை பெய்தது. இரவில் புதுக்கோட்டை நகர் உள்பட கறம்பக்குடி, கொத்தமங்களம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்தது.

# குமாரபாளையம் நகரக் கழக முன்னோடி தி.கு.சண்முகம் மறைவு!

## அமைச்சர் மா.மதிவேந்தன் - எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!

*நாமக்கல், அக்.18 -*

குமாரபாளையம் கழக முன்னோடி தி.கு.ச (எ) தி.கு.சண்முகம் அவர்கள் நேற்று (17.10.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த சண்முகம் உடலுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த சண்முகம் 1965 முதல் 1972 வரை குமாரபாளையம் பேரூர் கழக செயலாளர், 1972 முதல் 1979 வரை பள்ளிபாளையம் ஒன்றிய கழக செயலாளர், 1979 முதல் 1983 வரை குமாரபாளையம் நகரக் கழக செயலாளர், 1983 முதல் 1997 வரை ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 2004 முதல் 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 1996 ல் குமாரபாளை யம் நகர கூட்டுறவு வங்கி தலைவர், 2004 முதல 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட அவை தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குமாரபாளையம் நகர முன்னாள் செயலாளர் தி.கு.சண்முகம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை,அக்.18–

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் நகரக் கழக முன்னாள் செயலாளரும், குமாரபாளையம் பேரூர்க் கழக முன்னாள் செயலாளரும், பள்ளிப் பாளையம் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட க் கழக முன்னாள் துணைச் செயலாளருமான தி.கு.ச. என்கிற தி.கு. சண்முகம் அவர்கள் நேற்று (17.10.2023) இயற்கை எழுதினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

# உதகை ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

*நீலகிரி, அக். 18-*

நீலகிரி மாவட்டத்தில், உதகை ஊராட்சி ஒன்றியத்தில், ரூ.13.70 இலட்சம் மதிப்பில்முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ், ரூ.9.96 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட குடிநீர் பணிகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், மேல்குந்தா ஊராட்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில்கிண்ணக்கொரை பகுதியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.8 இலட்சம் மதிப்பில் கட்டியுள்ள சமுதாயக்கூடம் முன்புறம் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட பணி மற்றும் ரூ.5.70 இலட்சம் மதிப்பில் அப்பட்டியில் நடைப்பாதையுடன் கழிவுநீர் கால்வாய் மற்றும் உறிஞ்சிக்குழி அமைக்கப்பட்ட பணியினையும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, ஒசட்டி பகுதியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ், ரூ.9.96 இலட்சம் மதிப்பீட்டில் 78 குடியிருப்பு களுக்கு குடிநீர் குழாய் மூலம் குடிநீர் வழங்கும்பணியினையும்தொடங்கி வைத்தார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர், நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், மேல் குந்தா ஊராட்சிக்குட்பட்ட 9 குடியிருப்புகளுக்கான மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் வராகப்பள்ளம் நீரோடையை நீராதாரமாக கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.5.45 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு, தற்போது நிறைவடையும்நிலையில் உள்ளதை நேரில்பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.உமாமகேஷ்வரி, தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியம் உதவி பொறியாளர் திருமதி.சங்கீதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாம் சாந்தகுமார், குந்தா வட்டாட்சியர் திருமதி. கோ.கலைச்செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், நந்தகுமார், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாநகர் மாவட்டம்

# காமராஜர்புரம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜர்புரம் பகுதிச் செயலாளர் எம்.எஸ்.தெட்சிணாமூர்த்தி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.எம்.முத்து**, (முருகன் இல்லம், 2சி, கோதண்டராம் மில் ரோடு, கீரைத்துறை, மதுரை 625 001.) அவர்கள், காமராஜர்புரம் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஒரத்தநாடு மு.காந்தி

## அக்டோபர் 18 (2020)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஒரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**